பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 30 (13—7—68) சனி ★ வெளியூர்: ஆனி 31 (14—7—68) ஞாயிறு [இதழ்: 25

இலவசப் புத்தகங்கள்

சென்னை, ஜூலை 15—

ஏழை மாணவர்களுக்கு இலவசமாக நோட்டுப் புத்தகங்கள், பலகைகள் முதலியவற்றை வழங்கிய நகராட்சிப் பள்ளிகளுக்கு அதற்கான நிகர செலவு முழுவதையும் மானியமாக அளிக்கத் தமிழக அரசு உத்தரவு ஒன்று பிறப்பித்திருக்கிறது.

1966—67 கல்வி ஆண்டில் இவ்வகையில் செலவழித்த நகராட்சி துவக்கப் பள்ளிகளுக்கு இந்த மானியம் நடப்பு ஆண்டில், வழங்கப்படும். சென்னை மாநகராட்சி, ரூ 46,159-36 மானியமாகத் திரும்பப் பெறுகிறது.

அறிஞர் அண்ணா ஆட்சியின் சாதனை!

ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்களின் தவருன வாதம்

உணவு அமைச்சர் மதியழகன் ஆதாரத்துடன் மறுப்பு— குறைந்துள்ள விலைகளின் பட்டியலைக் காட்டி விளக்கம்

சென்னை, ஜூன் 13—

"விளைகின்ற உணவுப் பொருள்கள்—அதன் பயன்—சமுதாயத்தின் எல்லா விளிம்பையும் தொடவேண்டுமென நாம் மனதார விரும்பி உறுதியான நடவடிக்கைகள் எடுத்ததன் பயனுகத்தான் இன்றைக்கு விலைவாசிகள் வீழ்ச்சியடைந்திருக்கின்றன.

"அரிசி மட்டுமன்றி, இன்றியமையாப் பொருள்களின் விலைகளும் இன்று மிகப் பெரும் அளவில் குறைந்திருக்கின்றன! இதற்காக இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது! இதற்காகவே நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது, போராட்டம் நடத்தினேம்! 2500 பேர்கள் அன்றைய ஆட்சியாளரால் சிறையில் வைக்கப்பட்டோம்!

"ஆகவே நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு பருப்பு வகைகளின் விலையையும், மற்ற பொருள்களின் விலைகளையும் குறைக்க உறுதியான நடவடிக்கை எடுத்ததன் பயனுக விலைவாசிகள் வீழ்ச்சியடைந்திருக்கின்றன!"

இவ்வாறு உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் ஓட்டல் உரிமையாளர்கள் சங்கச் சார்பில் நடைபெற்ற—தற்போதய உணவு நிலை பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளியத் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அறிஞர் அண்ணா அவர்கள் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, நாட்டில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறது!

விலைவாசி இன்றைக்கு ஏதோ ஓரளவு குறைந்திருக்கிறது எனக் கூறத்தக்க அளவில் இல்லை—பெரும் அளவுக்குக் குறைந்திருக்கிறது! நூற்றுக்கு 50-சதவிகித அளவு என்றுகூடச் சொல்லலாம்! இதை யாரும் மறுப்பதற்கில்லை!

'விலைவாசி குறைந்திருக்கிறது' என்று சொன்னுல், இது எப்படி எங்களால் முடிந்தது என்பதை எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

சிலர் கூறுகிருர்கள்—'பருவ மழை பெய்தது' என்று; அறிஞர் அண்ணா அவர்கள், சட்டமன்றத்திலேயே இது எவ்வளவு தவருன வாதம் என்பதை எடுத்துச் சொன்னுர்கள்.

உண்மையில் பார்த்தால் சென்ற ஆண்டு-ஐவிட இந்த ஆண்டில் பெய்த மழையின் அளவு குறைவுதான்!

இரண்டாவதாக, 'உணவுப் பொருளின் உற்பத்தி பெருமளவு அதிகரித்திருக்கிறது' என்று கூறுகிருர்கள்.

உணவுப் பொருள் உற்பத்திகூட நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு—அவ்வளவு அதிகமாக உற்பத்தியாகிவிடவில்லை; இரண்டு இலட்சம் டன் கூடுதலாகக் கிடைத்திருக்கிறது; அவ்வளவுதான்; 'இதனுல்தான் விலைவாசி குறைந்தது' என்பது சரியான வாதமல்ல!

'ஏதோ, இது உங்கள் சாதனை' என்பதை ஒப்புக்கொள்ள மனமில்லாதவர்கள், அரசியல் காரணத்திற்காக அப்படிக் கூறலாமே தவிர, உண்மையில் காரணம் அதுவல்ல; பிறகு என்ன காரணம் இதற்கு?

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 24-மணி நேரத்தில் எல்லையில் காவலைப் பலப்படுத்தினுர்கள்!

கள்ள மார்க்கெட்டுக்காரர்கள், கொள்ளை இலாபக்காரர்கள் நோக்கம் ஈடேருமல் தடுக்க பல இலட்சம் டன்வரை கொள்முதல் செய்திருக்கிறேம்.

இவைகளை நாம் வாங்காமல் இருந்திருந்தால், கொள்ளை இலாபக்காரர்களும், கள்ள மார்க்கெட்டுக்காரர்களும்தான் வாங்கியிருப்பார்கள்; அதனுல் விலைவாசி ஏறத்தான் செய்யும்; ஆகையால் அதைத் தடுக்கிறேம்!"

பயர்மென்கள் வேலைநிறுத்தம்

தலைமையமைச்சர் காட்டும் தனி அக்கறை

புதுடில்லி, ஜூலை 15—

"நடைபெற்றுக்கொண்டு வரும் பயர்மென்கள் வேலைநிறுத்தம் சம்பந்தமாக, தனி அக்கறை எடுத்துச் செயல்பட்டுவருகிறேன்"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தம்மைச் சந்தித்த கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு அவர்களிடம் உறுதிகூறியிருக்கிருர்.

கேரள அஞ்சல் ஊழியர் வேலைநிறுத்தம்

மாநில அமைச்சரின் தலையீட்டால் நின்றது

திருவனந்தபுரம், ஜூலை 12—

கேரளப் பகுதி ஆர்.எம்.எஸ். ஊழியர்களின் வேலைநிறுத்தம், மாநிலத் தொழிலாளர் அமைச்சர் தலையிட்டதன்பேரில் முடிவுற்றிருக்கிறது. வேலைநிறுத்தம் காரணமாக அஞ்சல் பட்டுவாடா பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்துஸ்தான் உருக்காலையில் அடையாள வேலைநிறுத்தம்

துர்காபூர், ஜூலை 13—

இடது கம்யூனிஸ்டு ஆதிக்கத்திலுள்ள இந்துஸ்தான் உருக்காலைத் தொழிலாளர் சங்கம், தனது 17 அம்சக் கோரிக்கையை வற்புறுத்தும் முறையில் நேற்று ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொண்டது.

ஆயினும், '35 முதல் 40 சதவிகிதம் பேர் வேலைக்கு வந்திருந்தனர்' என்று போலீசு வட்டாரங்கள் கூறின.

அங்கீகரிக்கப்பட்ட தேசியக் காங்கிரசு சங்கம் இந்த வேலைநிறுத்தத்தை எதிர்த்து வந்திருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

சுற்றுப்பயணம்

சென்னை, ஜூலை 13—

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் நாளை (14—7—68) காஞ்சிபுரம் சென்று மாலை அங்கு எஸ். எஸ். கே. வி. பள்ளிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டுவார்கள்; பிறகு, நகராட்சி ஊழியர்கள் மாநாட்டில் கலந்துகொள்வார்கள்; மறுநாள் சென்னை வந்து சேருவார்கள்.

17—7—68 காலை 11-45 மணிக்கு விமானம் மூலம் டில்லிக்குப் புறப்படுகிருர்கள்; ஜூலை 18, 19 ஆகிய இரண்டு நாட்களும் நிதிக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு விட்டு, ஜூலை 20-ம் நாள் விமானம் மூலம் புறப்பட்டு பிற்பகல் 1-மணிக்கு சென்னை வந்தடைவார்கள்.

வேறு சமாதானம் வேண்டாம்— விலையை முதலில் குறையுங்கள்!

சென்னை ஓட்டல்காரர்கட்கு அமைச்சர் கே. ஏ. மதியழகன் கடும் எச்சரிக்கை

சட்டத்தைப் பயன்படுத்த இடமில்லாமல் தாங்களாகவே முன்வருமாறு வற்புறுத்தல்

சென்னை, ஜூலை 13—

"சென்னையில் 1965-ம் ஆண்டு சனவரியில் 580 ஆக இருந்த வாழ்க்கைச் செலவுப்புள்ளி, 1965 டிசம்பரில் 620 ஆக உயர்ந்தது; மொத்தத்தில் 40 புள்ளி அதிகமாயிற்று!

"அடுத்த 1966-ம் ஆண்டு சனவரியில் 620 ஆக இருந்தது 700 ஆக உயர்ந்தது; மொத்தத்தில் அந்த ஆண்டில் 80 புள்ளி உயர்ந்தது!

"ஆனுல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தபிறகு—அரசு மாறியபோது—700 ஆக இருந்த புள்ளி, 1967 டிசம்பரில் 720 ஆகத்தான் உயர்ந்தது; அதிகமாக 20 புள்ளிதான் உயர்ந்தது.

"1968 சனவரிக்குப் பிறகு இந்த 6-மாத காலத்தில் 46 புள்ளி குறைந்திருக்கிறது; அதாவது, 720 ஆக இருந்தது—ஆண்டுதோறும் உயருவதுபோல் அல்லாமல்—46 புள்ளி குறைந்து 674 ஆக மாறியது; இது சென்னை நகரில்; இதுபோலவே மற்ற நகரங்களிலும் தொழிலாளருக்கான வாழ்க்கைச்செலவுப் புள்ளி குறைந்துகொண்டே வருகிறது. நிச்சயமாகச் சொல்வேன்—இன்னும் குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது!

"**ஆகவே ஓட்டல் அதிபர்கள் இதனை உணர்ந்து, மக்களின் அதிருப்திக்கு ஆளாகாமல் விலைகளைக் குறைக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வேறுவித வியாக்யானமோ, விவாதங்களோ தேவையில்லை, அதை யாரும் ஏற்கமாட்டார்கள். மக்கள் இப்போதே அதிருப்தி அடைந்திருக்கிருர்கள். இது, மக்கள் எண்ணங்களை பிரதிபலிக்கிற அரசு; எனவே, அவர்களது எண்ணத்திற்கு மதிப்பளித்து விலைகளைக் குறைத்து மற்ற வெளியூர்களுக்கும் நீங்கள் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும்.**

"**இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளைக் குறைப்பதற்கு அரசிடம் சட்டம் இருந்தால்கூட, இந்த அரசு அவைகளைப் பயன்படுத்த விரும்பவில்லை, இந்த அரசு மக்களின் ஒப்புதலைப் பெற்றுச் செயலாற்றி வருகிறது.**

"மக்கள் அதிருப்தியடைந்திருக்கிருர்கள்; இந்நிலையில் நீங்களாகவே இதற்கு முன்வந்து விலைகளைக் குறைக்க வேண்டியது அவசியம் என்பதை உங்களுக்கு நினைவுறுத்துகிறேன்.

"ஏதோ பொருளின் அளவை அதிகரித்துவிடலாம் என்று கூறுவதுகூட சரியல்ல; அது மக்களைத் திருப்திப்படுத்தாது. மக்களைத் திருப்திப்படுத்தக்கூடியவகையில் விலையும் குறைக்கப்பட வேண்டும்—அளவும் அதிகரித்தாகவேண்டும்—பொது மக்கள் நன்மைக்காகவும், இன்றைக்கிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறும் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்"

—சென்னை ஓட்டல் அதிபர்கள் சங்கக் கூட்டத்தில்

கழகத் தேர்தல்

வட்டக் கழகம்—

வட்டத் தகுதி படைத்த

பெருநகரக் கழகம்

ஆகியவைகளின் தேர்தல்

ஆகஸ்டு 3: சனி
,, 4: ஞாயிறு

ஆகிய நாட்களில் நடைபெறும்.

இதற்கான விவரம் பிரிதோரிடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மத்திய அரசு ஊழியர் வேலை நிலைமை

ஆய்வுக் குழுக் கூட்டம் தோல்வியில் முடிந்தது

புதுடில்லி, ஜூலை 13—

மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம், மற்றும் வேலை நிலைமை பற்றி விவாதிப்பதற்காக நடைபெற்ற தேசியக் குழுவின் கூட்டுக் கூட்டம் தோல்வியில் முடிந்திருக்கிறது!

குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமான பிரச்சினையையும், உயர்ந்து வரும் விலைவாசிக்கேற்ப—அதனை ஈடுகட்டும் முறையை ஆராய்வதையும் மத்தியஸ்தத்துக்கு விடவேண்டுமென்ற கோரிக்கையை அரசுப் பிரதிநிதிகள் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து தொழிலாளர் பிரதிநிதிகள் ஒருமனதாக 'கூட்டத்தில் பங்கேற்பதில்லை' என்று முடிவு செய்ததே கூட்டம் வெற்றி பெருமல் போனதற்குக் காரணமாகும்.

தென்காசி-காங்கிரசுக்குப் பெரும் சரிவு

‘அதிகார துஷ்பிரயோகம்’ என்பதை அனுபவசாலிகள் ஏற்கமாட்டார்கள்

மேடை ஏறிய காங்கிரசார் உண்மையான குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை!

காங்கிரசுக் கட்சி பலவீனப்பட்டதற்கு வசவாளர்களே காரணம்

“சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரசு அபேட்சகரைத் தேர்ந்தெடுத்தனுப்பிய தென்காசி வாக்காளர்கள், இந்த முறை காங்கிரசிற்குப் படுதோல்வியைப் பரிசாகக் கொடுத்தார்கள் என்பது மட்டுமல்ல—காங்கிரசுத் தலைவர்களே சற்றும் எதிர்பாராதவகையில் அதிர்ச்சி வைத்திய முறையில் தி. மு. க. அபேட்சகரை 23 000 வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

“தி. மு. க. அபேட்சகர் வாங்கிய வாக்குகளில் பாதியைத்தான் காங்கிரசு பெறமுடிந்தது என்றால், சென்ற பொதுத் தேர்தலை விடக் காங்கிரசின் செல்வாக்கில் பெரும் சரிவு ஏற்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலை!”

என்று, ‘சுதேசமித்திரன்’ அரசியல் நிருபர் கருத்தறிவித்திருக்கிறார். 10—7—68-ம் நாள் இதழில், ‘காமராஜ்-சி. எஸ். மோதல்தான் தென்காசித் தோல்விக்குக் காரணமா?’ என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள மதிப்பீட்டுக் கட்டுரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது :–

காங்கிரசு சந்தித்த தோல்வி, சர்வசாதாரணமாக ஏற்பட்ட ஒன்றல்ல!

“இதில் அரசியல் முக்கியத்துவம் எதுவும் இல்லை. காங்கிரசு பெரிய கட்சி; இந்தச் சிறு தோல்வியால் துவண்டு விடாது” என்று பேசுவதெல்லாம் வெறும் சமாளிப்புப் பேச்சுத்தானே!

உண்மையிலேயே தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டி இப்போது கடுமையான சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது.

‘தி. மு. க. ஆட்சியில் மக்கள் ஏமாற்றம் அடைந்திருக்கிறார்களா இல்லையா?’ என்பதற்கான சோதனைக் களமாகத் தென்காசியைக் காங்கிரசுத் தேர்ந்தெடுத்தது.

இந்தப் படுகளத்தில், கிராம மக்கள், தங்கள் ஆதரவு ஆளும் கட்சியின் பக்கம்தான் இருக்கிறது என்பதைத் தெளிவாக உணர்த்திவிட்டனர்.

காங்கிரசின் சார்பில் மேடை ஏறியவர்கள் அனைவரும் தி.மு.க. அமைச்சர்களை — போலீசு அதிகாரிகளை—நிர்வாக இயந்திரத்தைத் திட்டித் தீர்ப்பதிலேயே தங்கள் நேரத்தையும் நினைப்பையும் செலவிட்டார்களே தவிர, ஆளும் கட்சிக்கு எதிராக மக்களைக் கவரும் வகையில் உண்மையான குற்றச்சாட்டுகளைக் கூறவில்லை.

வசவாளர்களால் காங்கிரசு பலவீனப்படுமே தவிர, பலப்படுத்த முடியாது என்பது இந்த இடைத் தேர்தலிலிருந்து ஐயந்திரிபறத் தெரிகிறது.

“விலைவாசிகள் இறங்கிவிட்டன; விவசாயிகள் தலையில் கைவைத்து விட்டார்கள்” என்று காங்கிரசுத் தலைவர்கள் முதல் சாதாரணத் தொண்டர் வரை, தொகுதி முழுவதும் கொட்டி முழககினார்கள்!

கிராமத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் குத்தகைதாரர்கள். விவசாயக் கூலிகளின் எண்ணிக்கையும் குறைவில்லை. சொந்தத்தில் நிலம் வைத்திருப்போர் மிகச் சிலர்; அதிலும் ஒருவர்—இருவர்தான் பெரும பண்ணைக்காரர்கள். மற்றவர்கள் அனைவரும், ஒரு ஏக்கர்—இரண்டு ஏக்கர் விவசாயிகள்; எல்லாப் பொருள்களின் விலையும் இறங்குவதால் பெரும்பாலான கிராம மக்கள் இலாபம் பெறுவார்களே தவிர, யாரும் ஆளும் கட்சி மீது ஆத்திரம் கொள்ளமாட்டார்கள்!

இந்த அடிப்படையைப் புரிந்து கொள்ளாமல் ‘பானையைக் கட்டி’ப் பிரசாரம் செய்து காங்கிரசு தோற்றுவிட்டது!

‘ஊருக்காக அழவில்லை; இவர்கள் வேறு யாருக்காகவோ அழுகிறார்கள்; எச்சரிக்கை—எச்சரிக்கை’ என்று தி. மு. க. வினர் பொதுமக்களுக்குச் சுலபத்தில் அரசியல் விளக்கம் அளித்துவிட்டனர்!

‘பெண்கள்தான் தென்காசித் தொகுதித் தேர்தல் முடிவை நிர்ணயிக்கப் போகிறார்கள்’ என்று ஏற்கனவே அரசியல் தலைவர்களுக்குத் தெரிந்திருந்தும், இந்த வகையிலும் காங்கிரசுக் கட்சியின் பிரசாரப் பாணி தோற்றுவிட்டது!

“பெண்கள் தெருவில் நடமாட முடியவில்லை — பெண்களுக்குப் பாதுகாப்பில்லை” என்று காங்கிரசுத் தலைவர்கள் மேடைதோறும் பேசினர்!

“அப்படி என்ன நடக்கிறது என்று பார்த்துவிடலாம்” என்று பெண்கள் துணிந்துவிட்டார்கள்!

தென்காசித் தொகுதி முழுவதும் பெண்கள்தான் நீண்ட வரிசையில் வெகு நேரம் காத்து நின்று வாக்களித்தனர்! மழையையும் பொருட்படுத்தாது பெண்களெல்லாம், வாக்களிக்க முந்திக்கொண்டு வந்தது காங்கிரசிற்கே பாதகமாக முடிந்துவிட்டது!

தேர்தல் அதிகார துஷ்பிரயோகம் நடந்ததாகக் குற்றஞ் சாட்டப்படுவது, எல்லாத் தேர்தல்களுக்கும் பொதுவானதுதான்.

‘அதிகாரிகள் மனது வைத்தால், தேர்தல் முடிவை மாற்றி அமைத்துவிட முடியும்’ என்கிற அளவுக்கு சனநாயகம் இன்னமும், பால பருவத்திலிருப்பதாகச் சொன்னால், நான்கு பொதுத் தேர்தல்களையும் கண்ட அனுபவசாலிகள் அதை ஏற்கமாட்டார்கள்!

ஆளும் கட்சிக்குப் பயந்து அல்லது அதிகாரவர்க்கத்திற்குக் கட்டுப்பட்டு வாக்களிக்கும் காலம் மலை ஏறிவிட்டது!

சில சலுகைகளைக் கொடுப்பது—கிணறு வெட்டக் கடன் கொடுப்பது போன்ற உடனடி நிவாரணங்களுக்கு உத்தரவிடுவது போன்ற காரியங்களால் சில ஆயிரம் வாக்குகளை வேண்டுமாயின் திரட்ட முடியுமே தவிர, பல்லாயிரக் கணக்கான மக்களை மாற்றிவிட முடியாது.

‘ஆளும் கட்சிக்கு வாக்களிக்காவிட்டால், நமது தொகுதியைப் புறக்கணித்து விடுவார்களோ’ என்ற பயம் சிலருக்கு இருந்திருக்கலாம்; ஆனால், அதுவே தி. மு. க.-வின் வெற்றிக்குக் காரணம் என வாதிடுவது சரியல்ல!

தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டியில் இரண்டு கோஷ்டிகள் மோதிக்கொள்வதால், பலவீனம் அதிகரித்துவிட்டது.

‘காமராஜ் கோஷ்டி பெரிதா?—சுப்பிரமணியம் கோஷ்டிக்கு அதிகமா?’ என்ற போட்டியிலேயே, தென்காசியைக் கோட்டைவிட்டார்கள்!

சுதந்தர ஒளிபெறும் மற்றொரு நாடு

3.75 இலட்சம் பேர்களே வாழ்கின்றனர்!

இந்த ஆண்டு செப்டம்பர் 6-ம் நாள் ஆப்பிரிக்காவிலுள்ள ஸ்வாசிலாந்திற்குச் சுதந்தரம் வழங்கப் பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

ஸ்வாசிலாந்து விடுதலையடைந்துவிட்டால், ஆப்பிரிக்கக் கண்டத்திலுள்ள அத்தனை நாடுகளும்—ஒன்றே ஒன்று தவிர—விடுதலையடைந்துவிடும்! ‘இருண்ட கண்டம்’ என்று அழைக்கப்பட்டு வந்த ஆப்பிரிக்க நாடுகள் அனைத்திலும் சுதந்தர ஒளி வீசும்! அந்த ஒளிபடாத ஒரே நாடு ரொடீஷியாதான்! அதற்கும் சட்டபூர்வமாக சுதந்தரம் வழங்கப் பிரிட்டன் தயார்தான்; ஆனால் அதற்குத் தடையாக இருப்பது ரொடீஷியாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் இயான் ஸ்மித் ஆட்சியாகும்!

தெற்கு ஆப்பிரிக்காவிலுள்ள ஒரு உள்நாடு ஸ்வாசிலாந்து இதன் பரப்பு 6,705 சதுர மைல்களாகும்.

தென் ஆப்பிரிக்கா, மொசாம்பிக் இவற்றால் சூழப்பட்டுள்ளது.

இந்த நாட்டின் மக்கள் தொகை 3,75 000. இவர்கள் பெரும்பாலும் ஆப்பிரிக்கர்களே!

சுமார் 8,000 ஐரோப்பியர்களும் இங்கு வசிக்கிறார்கள்.

நிலையான பொருளாதாரம் உள்ள நாடு இது.

1965-ம் ஆண்டு இந்நாட்டின் ஏற்றுமதி 15 கோடி பவுன்கள்; இறக்குமதி 13 கோடி பவுன்களாகும்.

குறைகளை தெரிவிப்பது தவறானதல்ல!

அவற்றைக் களைய முயல்வது அரசின் கடமையாகும்

ஆர்.எம்.எஸ். ஊழியர்களிடை அமைச்சர் மாதவன் உரை

புதுடில்லி, ஜூலை 12

“எந்தத் தனிப்பட்ட மனிதனும், தன்னுடைய குறைகளைப் பற்றிக் கேட்பதை, ‘தவறு’ என்று சொல்லிவிட முடியாது!

“கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து, அவற்றைக் முயலுவதுதான் ஆட்சியாளரின் பணியாகும்!

“தொழிலாளர்கள், இந்த நாட்டின் வடிவம்; அவர்களுடைய வாழ்க்கையைச் செப்பனிடுவது ஆளும் கட்சியின் பொறுப்பாகும்.

“சக்திக்கேற்ற உழைப்பு -- தேவைக்கேற்ற வசதி அவசியமாகும்; அந்த மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு அனைவரும் பாடுபடவேண்டும்”

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், அனைத்திந்திய ஆர்.எம்.எஸ். 3-ம் வகுப்பு ஊழியர் சங்க விழுப்புரம் கிளையின் 12-வது ஆண்டு விழாவினையொட்டி, ஜூலை 10-ம் நாள் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்.

மாநில சங்கத் தலைவர் எஸ். கருணானந்தம் தலைமைதாங்கினார்.

செயலாளர் சி. நம்மாழ்வார், செயராமன், முத்துநாகப்பன், து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி, தெய்வீகன் எம்.பி., மாயவன் எம்.பி. ஆகியோரும் உரையாற்றினர்.

இறுதியில், அமைச்சர் செ. மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“தொழிலாளர் சமுதாயத்திற்குக் குடியிருப்பு வசதி இன்றியமையாததாகும். ஏற்கனவே ரூ. 32 இலட்சம்தான் இதற்காகச் செலவிடப்பட்டது; தற்போது ஆண்டுதோறும் ரூ. 5 இலட்சம் வீதம் அதிகப்படுத்தி வரப்படுகிறது.

வருமானத்தில் நிர்வாகச் செலவு அதிகரித்துக்கொண்டே போகுமானால், பொருளாதார வளர்ச்சி சீரடைந்துவிடும்.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்தான் இருக்கவேண்டும்; அதுவும், கட்சிக்கு அப்பாற்பட்டுத் தொழிலாளர்களின் குறைகளையும் போக்கி -- தொழிலாளர்களின் நலனைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும்.

மத்திய அரசு தனது பங்கைத் தந்தால் மாநில அரசு எல்லாவித வசதியையும் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறது.

எத்துறையிலும் பலாத்கார உணர்ச்சி தடுக்கப்பட வேண்டும்; எவ்வித பலாத்காரத்தில் எவர் ஈடுபட்டாலும் சரி — வருமானத்திற்குத் தகுந்தாற்போல்தான் அரசு செலவிட இயலும்.

“குறைகளைப் போக்கிக்கொள்ளவோ அல்லது பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வேண்டுகோளை நிறைவு செய்துகொள்ளவோ, போராட்டம்—வேலைநிறுத்தம்—உண்ணாநோன்பு போன்ற வழிகளில் ஈடுபட்டால்தான் வழி காண இயலும்” என்ற பாரம்பரியத்தை, ஆங்கிலேயர்கள் உருவாக்கிச் சென்றுவிட்டார்கள்!

சென்னைப் பகுதியில் வீடு கட்டும் திட்டம் ஒன்றுக்கு ரூ. 82 இலட்சம் மதிப்பில் திட்டம் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.”

புதிய முறையில் தாக்குதல் நடத்த செஞ்சீனா திட்டம்?

புதுடில்லி, ஜூலை 12—

‘செஞ்சீனாவும், பாகிஸ்தானும் இந்தியாமீது புதிய தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் இருக்கிறது”

என்று, ஜனசங்கத்தின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பால்ராஜ் மதோக், செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

“கலக நாகர்களின் உதவியுடன் அசாமில்—‘வியட்நாம் பாணி’ போரை நடத்த செஞ்சீனா திட்டமிட்டிருக்கிறது.

“காஷ்மீரிலும் — உல்லாசப் பயணிகள் சுற்றுலாப் பயணப் பருவம் முடிந்தபின்—பாகிஸ்தான் மூலம் இதுபோன்ற தாக்குதல் ஏற்படுவது இயலக்கூடியதேயாகும்.”

பத்திரிகை நிருபர் வேலைக்கும் ஆபத்து

செய்தி திரட்டவும் கம்ப்யூட்டர்!

மாநாட்டு நிகழ்ச்சிகள்—பொதுக் கூட்ட நடவடிக்கைகள்—மற்றும் கருத்தரங்கு உரைகள் ஆகியவற்றை நிருபர்கள் குறிப்பு எடுத்துப் பத்திரிகைகளுக்கு கொடுத்து வரும் வழக்கம்தான் இன்றுவரை இருந்துவருகிறது.

இந்த நிருபர்களுக்கு அறைகூவல் விடும் வகையில், ‘கம்ப்யூட்டரை’ப் பயன்படுத்தலாம் என்று இப்போது பிரிட்டிஷ் நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

மாநாடு — பொதுக்கூட்டம்—கருத்தரங்கு ஆகிய எந்த இடமானாலும் சரி—அங்கெல்லாம் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளும், விரிவுரைகளும் அப்படியே—ஒரு வார்த்தை தவறாமல்—குறிப்பெடுத்துத் தந்துவிடுகிறது கம்ப்யூட்டர்! அதுவும், அவர்கள் அங்கு பேசிக்கொண்டிருக்கும்போதே அந்தப் பேச்சின் பிரதி போன்ற குறிப்பு பத்திரிகை அலுவலகத்திற்குக் கிடைத்து விடுகிறது. இந்த வகையில் ஒரு நிமிடத்திற்கு 240 முதல் 400 வார்த்தைகள் வரை அனுப்ப முடிகிறது.

சர்க்கரை தேக்கம்

இலட்சுமணபுரி, ஜூலை 12—

உத்தரப் பிரதேசத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் ஏராளமான சர்க்கரை தேங்கிக் கிடக்கின்றனவாம்!

“ஆலைகள் பலவற்றில் உற்பத்தியான சர்க்கரையில் பாதி விற்பனையாகாமல் இருக்கிறது; பெரும்பாலான ஆலை முதலாளிகள், தொழிலாளர்களுக்குச் சம்பளம் தராமலும், அரசுக்குச் செலுத்தவேண்டிய பாக்கியைச் செலுத்தாமலும் இருக்கின்றனர்”

என்று அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களிடம் கடன்

தமிழக வீட்டு வசதி வாரியத்துக்கான ஏற்பாடு

திருச்சி, ஜூலை 12—

தமிழக வீட்டு வசதி வாரியத்தின் தற்போதைய திட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதி வசதியைப் பெறும் வகையில் தமிழக அரசு, பொதுமக்களிடமிருந்து கடன் எழுப்ப முடிவு செய்துள்ளது.

இத்தகவலை, அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் தெரிவித்தார்.

“வீட்டு வசதி வாரியத்தின் பெரும்பாலான திட்டங்கள், நிதி வசதியின்மையினாலேயே கைவிடப்பட்டோ, தாமதப்பட்டோ இருக்கின்றன” என்றார் அமைச்சர்.

சுப்பிரமணியத்தின் அர்த்தமற்ற குற்றச்சாட்டு!

மொரார்ஜியின் ஆசீர்வாதத்துக்குக் கிடைத்த பலத்த அடி!

தப்புக்கணக்குப் போட்டுத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்!

"இந்த இடைத் தேர்தலில், 'ஆளுங்கட்சிக்கு உடந்தையாக நிர்வாகம் செயல்பட்டது' என்று தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், அரசு நிர்வாகத்தினர்மீது பழி போடுவது உருப்படியான குற்றச்சாட்டு ஆகாது!

"இதுபோன்ற 'நிர்வாகத் தலையீடு' என்ற குற்றச்சாட்டுகளைக் காங்கிரசு ஆட்சியினர்மீது கடந்த காலத்தில் நாடெங்கும் எதிர்க் கட்சியினர் கூறிவந்துள்ளனர்.

"'இந்த இடைத் தேர்தலில் காங்கிரசு வெற்றிபெற முடியாது' என்று முன்கூட்டியே தெரிந்துகொண்டுதான், காங்கிரசின் தோல்வியை மறைப்பதற்கு ஆயத்தமாக நிர்வாகத்தினர்மீது பழி போடுவதென்று சி. சுப்பிரமணியம் திட்டமிட்டிருந்தாரோ என்றுகூட ஐயப்பட வேண்டியுள்ளது"

என்று தென்காசி இடைத் தேர்தல் முடிவு பற்றி பெங்களூரிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடான 'டெக்கான் ஹெரால்டு' 6-7-68-ம் நாள் இதழின் தலையங்கத்தில் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் கூறப்படுவதாவது:—

தென்காசி இடைத் தேர்தலில் தி. மு. கழகம் பெற்ற வெற்றி மூலம் காங்கிரசு பலமான தாக்குதலுக்குக் குள்ளாகியிருக்கிறது!

"தென்காசித் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகளின் நிலை பற்றிய இறுதிப் பிரதிபலிப்பாக இத்தேர்தல முடிவினை எடுத்துக்கொள்ள முடியாது" என்று அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, சிக்கலுக் குரியவகையில் கருத்தறிவித்துள்ளார்; அவரது கருத்துக்கு மாறுகத் தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தோல்வி பெரிய தோர் அடிதான்!

'தனி மரம் தோப்பாகாது' என்ற முறையில், 'தி. மு. கழகம் அடைந்த இந்த வெற்றி பெரிதல்ல' என்று கூறலாம்.

ஆனால், கடந்த பல தேர்தல்களின்போதெல்லாம் தென்காசி தொகுதியைக் காங்கிரசே கைப்பற்றியுள்ளது.

மேலும், இந்த இடைத் தேர்தலில் காங்கிரசு தன் இடத்தைக் காப்பாற்றிக்கொள்ள எடுத்துக்கொண்ட மிகப் பெரும் முயற்சிக்கு மாறுக, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் தி. மு. கழகத்துடன் நடத்திய நேரடிப் போட்டியில் காங்கிரசு படுதோல்வியடைந்துள்ளது. இந்த உண்மையை மறைக்க முடியாது.

இந்த இடைத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றிருக்குமானால், 'தி. மு. கழகத்தின் நிர்வாக முறையில் மக்கள் அதிருப்தி கொண்டுவிட்டனர்; அதன் 17 மாத கால ஆட்சி மூலம் ஏற்பட்ட அதிருப்தி காரணமாகவே வாக்காளர்கள் காங்கிரசை வெற்றிபெறச் செய்துள்ளனர்' என்று காங்கிரசுக்காரர்கள் தீவிரப் பிரசாரத்தில் இறங்கியிருப்பர்! அதன் மூலம் தமிழ்நாட்டில் தங்கள் நிலையைப் பலப்படுத்திக்கொள்ளவும் முனைந்திருப்பர்!

இராசபாளையத்தில் தமிழ்நாடு காங்கிரசுக் குழுவினர் கூட்டிய மாநாடு, மேற்கூறிய அடிப்படையில் காங்கிரசு ஊழியர்களிடையே ஊக்கமூட்டி காலாகாலமாக காங்கிரசுக்கே உரியதாகி வந்துள்ள தென்காசித் தொகுதியை மறுபடியும் கைப்பற்றும் முழு முயற்சிக்காகவும், தி. மு. கழகத்தைத் தோல்வியுறச் செய்வதற்காகவும், அதன்மூலம் 'தி. மு. கழகத்தின்மீது வாக்காளர்கள் அதிருப்திகொண்டு விட்டனர்' என்று மக்களிடையே பறையறைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவுமே கூட்டப்பட்டதாகும்!

தென்காசி இடைத் தேர்தலை முன்னிட்டு நடத்தப்பட்ட இராசபாளையம் காங்கிரசு மாநாட்டுக்கு மத்திய நிதியமைச்சர் மொரார்ஜிதேசாய் தாம் முக்கியமாகப் பங்கெடுத்துக்கொள்வதற்கு — காஷ்மீரில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் கூட்டத்தையும் அரைகுறையாக விட்டுவிட்டு—ஓடிவந்தார்; 'எவ்வாருயினும் மறுபடியும் காங்கிரசு ஆட்சிக்கு வரவேண்டும்' என்று தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்களை 'ஆசீர்வதிக்க'வே அவர் விரைந்தோடி வந்தார்!

இந்தத் தேர்தல் பற்றி நிஜலிங்கப்பா கருத்தறிவித்துள்ளது போல், இது சாதாரணமானதல்ல!

தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரசு வேட்பாளரைவிட 23256 வாக்குகள் அதிகம் பெற்று தி. மு. கழக வேட்பாளர் கதிரவன் பெற்ற வெற்றியானது, அற்பசொற்பமானதல்ல!

மேலும் 1967-லிருந்து பெற்றுவரும் வெற்றிகளை தொடர்ந்து இந்த இடைத் தேர்தலில் கிடைத்த வெற்றி தி. மு. கழகத்திற்கு மிகப் பெரும் வெற்றியாகும்.

தி. மு. கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த வெற்றியானது, அதன் கௌரவத்துக்குக் கிடைத்த அடையாள வெற்றியாகும்.

தேர்தல் என்றால், எதிர்பாராத பல நிகழ்வுகளும் இருக்கத்தான் செய்யும்.

எனினும், இந்தத் தேர்தல் முடிவு பற்றி காங்கிரசுக்காரர்கள் குறைத்து மதிப்பிட்டு, தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளாமலிருப்பார்களாக!

இந்தத் தேர்தல் முடிவுமூலம் காங்கிரசு தனது பழைய கௌரவத்தை நிலைநாட்டிக்கொள்வது மிகக் கடினம் என்று புரிகிறது.

எனவே, காங்கிரசுக்காரர்கள் தி. மு. கழகத்தை இழித்துப் பழித்துப் பேசுவதையே தமது வேலையாகக்கொள்வது, நன்மையை உண்டாக்காது! அத்துடன், மறுபடியும் பழைய நிலையைக் காங்கிரசு எதிர்பார்த்தால், அது நடவாத காரியமாகும்!"

நவீன தானியக்கிடங்கு

இலண்டன் துறைமுகத்திற்கு அருகில் புதிய தானியக் கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. சில மாதங்களில் வேலை முடிந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலகிலேயே மிகவும் நவீனமான தானியக் கிடங்குகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்தக் கிடங்கில் ஒரு இலட்சம் டன்னுக்கு மேற்பட்ட தானியத்தைச் சேமித்து வைக்க முடியும். துறைமுகத்தையொட்டி அமைந்துள்ள இந்தக் கிடங்கில் கப்பல்களிலிருந்து தானியங்களை நேராக இறக்குவதற்கு வசதியாக இயந்திரங்கள் உள்ளன.

மணிக்கு இரண்டாயிரம் டன் வீதம் கப்பலிலிருந்து தானியத்தைக் கிடங்கிற்குள் சேர்க்கும் சக்தி வாய்ந்தவை இந்த இயந்திரங்கள்.

பிற இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றாலும், கிடங்கிலிருந்து லாரிகளில் ஏற்றவும் இயந்திரங்கள் உள்ளன.

நாற்று நடுவதற்கும் இயந்திரம்

'இயலாதது' என்று எண்ணியதும் இயலுகிறது ஜப்பானில்!

ஜப்பானில் நெல் சாகுபடி செய்யும் 34 இலட்சம் விவசாயிகளிடை அமைதியானதோர் 'புரட்சி' நடைபெற்று வருகிறது! அது சாகுபடி வேலைகளை இயந்திரமயமாக்கும் புரட்சியாகும்!

விவசாயத் துறையில் நாற்று நடவுக்கு இயந்திரத்தை அறிமுகப்படுத்துவது, 'இயலாதது' என்று இதுவரையில் கருதப்பட்டு வந்தது; இப்போதோ, அந்த வேலைக்கெனத் தனியாக வடிவமைக்கப்பட்ட புதிய இயந்திரம் வந்திருக்கிறது!

இந்தப் புதிய இயந்திரம், ஓர் எளிய மாடல் பெட்ரோல் மோட்டாரினால் இயங்கும்சாதாரண இயந்திர உழு கருவியை அடிப்படையாகக் கொண்டதாகும். அதில் ஏராளமான நாற்றுகளைக் கொண்ட பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன. உருக்கினாலான 'இரு கைகள்' அந்த நாற்றுகளை எடுத்து நடுகின்றன.

நாற்றுகளுக்கு இடையிலான தூரத்தை விருப்பப்படி மாற்றிக் கொள்ள அதில் வசதி உள்ளது. அந்த இயந்திரத்தை இயக்கிச் செலுத்தும் விவசாயி, கைப்பிடி ஒன்றைக் கொண்டு அதை விருப்பப்படி நகர்த்திச் செல்கிருர்.

தற்போது சில கருவிகள்தான் பயனுக்கு வந்துள்ளன; எனினும், அக்கருவியால் கிடைக்கும் சாதகம், மற்றவர்களையும் அதைக் கைக்கொள்ளத் தூண்டும் வகையில் உள்ளது.

உதாரணமாக, 10-ஏக்கர் வயலில் நாற்று நடுவதற்குச் சாதாரணமாக ஒரு விவசாயிக்கு 14.5 மணி நேரம் பிடிக்கிறது. அந்த இயந்திரக் கருவியைப் பயன்படுத்தினால், அதே பரப்பில் 2.6 மணி நேரத்தில் நடவு வேலையை முடித்துவிடலாம்.

விவசாயத் தொழிலாளருக்குக் கடும் பற்றாக்குறை இருப்பது தான், இந்த இயந்திரம் உருவாக்கப்பட்டதற்கான முக்கியக் காரணமாகும்.

செங்கற்பட்டு மாவட்டத்தின் சில அலுவலகங்கள்

தொடர்ந்து சென்னையிலேயே இயங்கும்

சென்னை, சூலை 12—

செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் (கலெக்டர் அலுவலகங்கள்) சென்னை நந்தனத்திலிருந்து காஞ்சிபுரத்திற்கு சூலை முதல் தேதியிலிருந்து மாற்றப்பட்டிருப்பினும், கீழ்க்கண்ட 9 அலுவலகங்கள் நந்தனம் கலெக்டர் அலுவலகக் கட்டிடத்திலேயே-மறு அறிவிப்பு வரும் வரையில்—தொடர்ந்து செயல்பட்டு வரும்.

1. செங்கற்பட்டு மாவட்ட சாசன அலுவலகம்.

2. கலெக்டர் அலுவலகம் சான் றேடுகள் பிரிவு (ரிகார்டு பிரிவு).

3. செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லைகளைத் தொட்டுக்கொண்டு செல்லும் பல்லாவரம், தாம்பரம், திருவொற்றியூர், மாதவரம், கிண்டி, ஆலந்தூர், ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதி மக்களுக்கு உணவுப் பண்டங்களுக்குக் குடும்பக் கார்டு வழங்கும் பணியைச் செய்ய தனித் தாசில்தாரின்கீழ் ஒரு தனி அலுவலகம்.

4. அரிசன நல இலகா சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்ய ஒரு தனித் தாசில்தாரின் மேற்பார்வையில் தனி அலுவலகம்.

5. தற்காப்புப் பிரிவின் (இராணுவம்) திட்டங்களுக்காக நில ஆர்ஜித பணிகளைச் செய்வதற்காக ஒன்றொரு தனித் தாசில்தாரின் கீழ் ஒரு அலுவலகம்.

6. தொழில் பேட்டைகள் பிரிவுகளைக் கவனித்துக்கொள்வதற்காகத் தனித் தாசில்தாரின்கீழ் ஒரு அலுவலகம்.

7. புழலேரி, சோழவரம் நீர்த்தேக்கத் திட்டப் பணிகளைக் கவனிக்கத் தனித் தாசில்தார் அலுவலகம்.

8. புழலேரி, சோழவரம் ஏரிகளிலிருந்து திறந்தவெளி கால்வாய் அமைக்கும் பணிகளைக் கவனிக்க மற்றொரு தனித் தாசில்தார் அலுவலகம்.

9. 'சர்வே' செக்‌ஷனின் ஒரு பிரிவு.

செங்கற்பட்டு மாவட்டம், 'தெற்கு—வடக்கு' என்று இரண்டு 'சர்வே' பிரிவுகளைக் கொண்டதாகும்.

தெற்கு பிரிவு சர்வே செக்‌ஷன் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

வடக்குப் பிரிவு சர்வே செக்‌ஷன் மாதவரத்திற்கு நந்தனம் பழைய கலெக்டர் அலுவலகத்திலேயே செயல்பட்டு வரும். இதற்குக் காரணம், வடக்குப் பிரிவு சர்வே செக்‌ஷனில் திருவள்ளூர், சைதாப்பேட்டை வட்டங்கள் இருக்கின்றன; இவை, சென்னை நகரை அடுத்தாற்போல் உள்ளதால், தேவை ஏற்படும் போது உடனுக்குடன் அந்த இடத்திற்குச் சென்று பணியாற்று வதற்கு வசதியாக இருக்கும் என்பதால், இப்பிரிவு நகரிலேயே பணியாற்றி வருகிறது.

புதுவையில் தென்காசி வெற்றிவிழா

புதுவை நகர தி. மு. க. சார்பில், 7-7-68-ல், செஞ்சிச் சாலைத் திடலில் தென்காசி வெற்றிவிழாப் பொதுக்கூட்டம் கவிஞர் சு. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.

நகரச் செயலாளர் கே. ஏ. ஜலீல், தொழிற்சங்கச் செயலாளர் செ. முத்து, வழக்கறிஞர் சு. பெருமாள், பெனுர், செல்லமுத்து, கந்தசாமி, புவிஅரசு, எம். ஏ. சண்முகம் ஆகியோர் பேசினர்.

இறுதியில், திரு. என். வி. என். செல்வம் சொற்பொழிவாற்றினர்.

கூட்டத்தில் தமிழ்ப் பெரியார் மயிலை சிவமுத்து அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பாலர் அரங்கம்

ஜூலை 14-ந் தேதி மாலை 2-00, 4-15 மணிக்கு

'டார்ஜானும் வேங்கைப் பெண்ணும்'

(எம்.ஜி.எம். படம்)

இந்தியப் பெருங் கடல்மீது செயற்கைக் கோள்!

உலகளாவிய தகவலுக்கு ஏற்பாடு உருவாகிறது

அடுத்த மார்ச் அல்லது ஏப்ரல் திங்களில் இந்தியப் பெருங் கடலுக்குமேல் நிலையான தகவல் போக்குவரத்துச் செயற்கைக் கோள் ஒன்று விண்வெளியில் செலுத்தப்படும்.

இதனால், உலகம் முழுவதும் செயற்கைக் கோள்மூலம் தகவல் போக்குவரத்து நடைபெறும் ஏற்பாடு தொடங்கிவிடும்.

அட்லாண்டிக், பசிபிக் பெருங் கடல்களுக்குமேல் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள செயற்கைக் கோள்களுடன் இந்தியப் பெருங் கடலின் செயற்கைக் கோள் இணைக்கப்படுவதால், உலகளாவிய தகவல் கோள் ஏற்பாடு உதயமாகும்!

டெலிபோன் உரையாடல்கள் முதல் டெலிவிஷன் ஒலி—ஒளி பரப்புவரையில், எல்லாவகையான தகவல் போக்குவரத்துக்கும் உலகளாவிய புதிய தகவல் கோள் ஏற்பாடு வசதி செய்யும்.

விண்வெளியில் செலுத்திய முதல் நாளிலிருந்தே இந்தியப் பெருங் கடல் கோள், டெலிவிஷன் நிகழ்ச்சிகளையும் அஞ்சல் செய்யக் கூடியதாக இருக்கும்.

ஆயினும், டெலிவிஷன் நிகழ்ச்சிகளை ஆசிய மக்கள் சாதாரணமாகக் காணக்கூடிய வசதி இன்னும் ஏற்படவில்லை; ஏனெனில், டெலிவிஷன் பெட்டிகள் வாங்க வேண்டும்; தகவல் கோளிலிருந்து ஏற்று அஞ்சல் செய்வதற்கான தரை நிலையங்களும் நிறுவப்பட வேண்டும்.

வட்ட வடிவப் பாதையில் பூமியைச்சுற்றும்கோள்

வாஷிங்டன், சூலை 11—

விண்வெளியில் வெகு தொலைவிலிருந்து வரும் மின்காந்த அலைகளை ஆராய்வதற்காக, 'எக்ஸ்புளோரர்-38' என்ற கோள், சுற்றிவட்ட வடிவமான விண்வெளிப் பாதையில், கடந்த ஞாயிறன்று செலுத்தப்பட்டது.

பூமத்திய ரேகைக்கு 59 டிகிரி சாய்வாக இருக்கும் இக்கோள், பூமியை ஒரு தடவைச் சுற்றிவர 3 மணி 44 நிமிடம் ஆகிறது.

கோளின் ரேடியோ ரிசீவர்-ஏரியல் அமைப்புகள், விண்வெளியில் குறைந்த அதிர்வில் வரும் மின்காந்த அலைகளையும் பதிவு செய்யக் கூடிய ஆற்றல் பெற்றது.

பூமியின் பால் வீதி மண்டலம், சூரிய—வியாழ மண்டலங்கள், பூமியின் சூழ்நிலை ஆகியவற்றிலிருந்து வரும் மின்காந்த அலைகளையும் பதிவு செய்யும்.

இவ்விடங்களிலிருந்து வரும் குறிப்பிட்ட அதிர்வுக்குக் குறைவான மின்காந்த அலைகள் பூமிக்கு எட்டுவதில்லை. பூமியின் அயனி மண்டலம் அவற்றை விண்வெளிக்கே திருப்பிவிடுகிறது.

அயனி மண்டலம் தடுக்கக் கூடியதான அதிர்வு, மிகக் குறைவான மின்காந்த அலைகளைப் பதிவு செய்ய அமைக்கப்பட்டுள்ள முதல் கோள் எக்ஸ்புளோரர்-38.

இந்த மின்காந்த அலைகளின் ஆராய்ச்சியின் விளைவாக, உலகத்தின் இறுதித் தோற்றம்—உருவமைப்பு ஆகியவற்றை அறிய முடியுமென்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

வட்டக் கழகம்--வட்டக் கழகத் தகுதியுள்ள பெருநகரக் கழகத் தேர்தல்கள்

வேட்பாளர் விண்ணப்பத்தாள் பற்றிய முக்கிய அறிவிப்பு

வட்டக் கழகம்--வட்டக் கழகத் தகுதி பெறும் பெருநகரக் கழகம் ஆகியவைகளின் எந்தப் பொறுப்புக்கான தேர்தலிலும் போட்டியிட விரும்புகிறவர், குறைந்தது ஐந்தாண்டுக் காலமாவது கழகத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருக்க வேண்டும் என்கிற சட்ட திட்ட விதிமுறைக்கேற்பவும், போட்டியிடும் தோழர்களின் வசதிக்கேற்பவும், தேர்தலில் காலதாமதத்தைத் தவிர்த்து உறுப்பினர் தகுதி பற்றி எழுப்பப்படும் ஐயப்பாடுகளைத் தவிர்க்கவும், தேர்தல்களுக்கான வேட்பாளர் விண்ணப்பத் தாள்களை முன்கூட்டியே முறைப்படி நிறைவு செய்து தலைமைக் கழகத்தின் பரிசீலனைக்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பி, அப்படி அனுப்பப்பட்ட விண்ணப்பத் தாள்களின் அடிப்படையிலேயே தேர்தல்கள் நடைபெற வேண்டுமெனக் கழகப் பொதுச்செயலாளர் அவர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. அதற்கேற்ப, வட்டக் கழகம்--வட்டக் கழகத் தகுதி படைத்த பெருநகரக் கழகம் ஆகியவைகளின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேல் அமைப்புக்கான பிரதிநிதிகள் 10 பேர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல்களில்:—

1. (அ) போட்டியிட விரும்புகிறவர்கள் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழக உறுப்பினராக இருந்திருக்க வேண்டும்.

(ஆ) வேட்பாளரை முன்மொழிபவரும் வழிமொழிபவரும் சம்பந்தப்பட்ட வட்டக் கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளாக இருத்தல் வேண்டும்.

(இ) போட்டியிட விரும்பும் வேட்பாளர், போட்டியிடும் பதவிக்கான வேட்பாளர் விண்ணப்பத் தாளை 24—7—68 மாலை 6-மணிக்குள் உரிய வேட்பாளர் விண்ணப்பக் கட்டணத்துடன் தலைமைக் கழகத்தில் சேர்ப்பித்துவிட வேண்டும்.

(ஈ) ஒரு பொறுப்புக்கு ஒரு விண்ணப்பத் தாள்வீதம் ஒன்றுக்கு மேற்பட்ட பொறுப்புகளுக்கும் விண்ணப்பத் தாள்களை நிறைவு செய்து தலைமைக் கழகத்திற்கு அனுப்பலாம்.

(உ) ஒவ்வொரு விண்ணப்பத் தாளுக்கும் விண்ணப்பக் கட்டணமாக ரூ. 5 அனுப்பவேண்டும்.

2. தேர்தல் ஆணையாளர்களை அந்தந்த வட்டங்களுக்கு வெவ்வேறு மாவட்டத்திலிருந்து தலைமைக் கழகம், அனுப்பி வைக்கும்.

3. தலைமைக் கழகத்திற்கு 24—7—68-க்குள் கிடைக்கும் வேட்பாளர் விண்ணப்பத் தாள்கள் முடிவுப்படி பரிசீலனை செய்யப்பட்டு, போட்டியிடத் தகுதிபடைத்த விண்ணப்பங்களை மட்டும் சம்பந்தப்பட்ட வட்டத்தின் தேர்தல் ஆணையாளரிடம் சேர்ப்பிக்கப்படும். பரிசீலனையில் ஏற்றுக் கொள்ளப்படாத விபரம், அவரவர்க்கு அறிவிக்கப்படும்.

4. தேர்தல் நடைபெறுவதற்கு முதல் நாள், வட்டத்தில் அந்தந்தப் பொறுப்புகளுக்குப் போட்டியிடும் தகுதிபடைத்த தோழர்களின் பட்டியலை, ஆணையாளர், தேர்தல் நடைபெறும் இடத்தில் அறிவிப்புப் பலகையில் எழுதி அறிவிப்பார்.

5. போட்டியிலிருந்து விலகிக்கொள்ள விரும்புகிற தோழர்கள், ஆணையாளரிடம் தேர்தல் துவங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக எழுத்துமூலமாக அறிவித்துவிட வேண்டும்.

6. விண்ணப்பத் தாள்கள், உரிய விவரங்களோடு தலைமைக் கழகத்தில் அச்சிடப்பட்டுள்ளன. அந்தத் தாளில் நிறைவு செய்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படும். வேறு தாள்களில் எழுதியனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. விண்ணப்பத் தாள்கள் தலைமைக் கழகத்திலும், மாவட்டச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் ஆகியோரிடத்தில் இன்று முதல் கிடைக்கும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

'சட்டவிரோதமானது'

கல்கத்தா, ஜூலை 13—மேற்கு வங்க மின் வழங்க ஊழியர்கள் செவ்வாய்க்கிழமை முதல் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வருவதை 'சட்டவிரோதமானது' என்று மாநில அரசு அறிவித்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சென்னை மாநகராட்சி அலுவலகத் திறப்பு விழா

சென்னை 84-வது வட்டம் பெரம்பூர் பாரக்ஸ் காலனி சாலையில் உள்ள மாநகராட்சிமன்ற 5 வது வட்டக் குழு அலுவலக மாடிக் கட்டிடத்தை உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி திறந்துவைப்பார்; இவ்விழா, 16—7—68 மாலை 6-30 மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லா பேக தலைமையிலும்—திரு. சு. பாலன் எம்.சி. அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும்.

நடக்க இருப்பவை

14--7--68

ஈரோடு

12-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு பாவேந்தர் திடலில்; தலைவர்: எஸ். பொங்கியண்ணன்; பேசுவோர்: கேரள சுந்தரம், ப. ச. விசுவநாதன், மா. சுப்பிரமணியம், எஸ். பொன்னுசாமி, டாக்டர் சேதுபாஸ்கரன், ஈ. ஆர். குமாரசாமி, ஏ. வி. ஏ. கந்தசாமி, நா. நடேசன், கு. குமாரசாமி.

நெல்லிக்குப்பம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 6-மணிக்கு சம்புலிங்கம் பூங்காத் திடலில்; தலைவர்: மு. பக்கிரி; பேசுவோர்: வி.கிருஷ்ணமூர்த்தி எம்.பி., கே. ஆர். சபாபதி, இரா பாண்டுரங்கன், எஸ். என். முகம்மது சையத், மற்றும் பலர்.

15--7--68

மதுரை 5-வது வட்டம்

5-வது வட்ட தி.மு.க. துவக்க விழா; மாலை 7-மணிக்கு கோரிப்பாளையம் ஜம்புகோபுரத்தில்; தலைவர்: மு. நடராசன்; பேசுவோர்: சி. தமிழரசி, கு. திருப்பதி, எம். மதுரைவீரன் எம்.சி., எம். எம். முத்தரசு, கே. கே. இரசாங்கம்.

கடலூர்

17-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு திருப்பாப்புலியூர் அம்மையப்பேட்டையில்; தலைவர்: ஆர். சுந்தரம்; பேசுவோர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., கி. கோவிந்தராசன், ச. இரணியன். (சிவகங்கை சேதுராசன் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மதுரை

எம். ஜி. ஆர். இளைஞர் எழுச்சி மன்றச் சார்பில் தென்காசி வெற்றி விழா; மாலை 7-மணிக்கு வடக்காவணி மூல வீதியில்; தலைவர்: ஆறுமுகம்; பேசுவோர்: கேரள சுந்தரம், எம். இரசாங்கம் எம்.எல்.ஏ., சொ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கூடலரசன், ச. இராவணன்.

விட்டுக்கட்டி

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: டி. எஸ். கல்யாணசுந்தரம்; பேசுவோர்: வி. எஸ்.கோவிந்தராசன் எம்.எல்.ஏ., ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., ப. முருகு, முக. இரசாக், வை சுப்பிரமணியம், கு. சண்முகம், கோ. வைரக்கண்ணு.

14--7--68

பெருநகரக் கிளைத் தேர்தல்கள்

ஆணையாளர் பெயர் விவரம்

★

செங்கற்பட்டு மாவட்டம்

தாம்பரம்	....	தி. ந. சம்பந்தம்
செங்கற்பட்டு	...	டி. சீனிவாசன்
திருவொற்றியூர்	...	கோ. செங்குட்டுவன்

தென்ஆற்காடு மாவட்டம்

கடலூர்	...	வி. முனுசாமி பி.காம். பி.எல்., எம்.எல்.ஏ.
விழுப்புரம்	...	டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ.பி.எல்.

தஞ்சை மாவட்டம்

நாகப்பட்டினம்	...	இரா. இராசன்

திருச்சி மாவட்டம்

புதுக்கோட்டை	...	குளித்தலை முத்துகிருட்டினன்
திருவரங்கம்	...	அ. நடராசன்

கோவை மாவட்டம்

பொள்ளாச்சி	...	கோவை மு. இராமநாதன்

இராமநாதபுரம் மாவட்டம்

இராசபாளையம்	...	லெ. வேலுச்சாமி
திருவில்லிபுத்தூர்	...	வே. கருணாகரன்
விருதுநகர்	...	பேரி. அழகு

நெல்லை மாவட்டம்

பாளையங்கோட்டை	...	போ. கண்ணபிரான்
கடையநல்லூர்	....	இரா. கிருட்டினன்

நெல்லிக்குப்பம் நகரக் கிளை தேர்தல்

தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் நகரக் கிளையின் கீழ்க்காணும் பொறுப்புகளுக்கான மறு தேர்தல், 21--7--68 பிற்பகல் 3-மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

மறு தேர்தல் நடைபெறும் பொறுப்புக்கள்

1. பொருளாளர் ஒருவர்
2. வட்டப் பிரதிநிதி ஒருவர்
3. செயற்குழுவுக்கு 6 உறுப்பினர்கள்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

நெல்லை மாவட்ட நகர -- பெரு நகரக் கிளைத் தேர்தல்

நெல்லை மாவட்ட நகர, பெருநகர தி. மு. க. கிளைகளின் தேர்தல்கள் கீழ்க்காணும் விவரப்படி நடைபெறும்:—

கோவில்பட்டி
ஆர் சனுர்த்தனம்
—வட்டக் கழகச் செயலாளர்

தென்காசி
ஏ. இராமநாதன்
—வட்டக் கழகச் செயலாளர்

மேலப்பாளையம்
ஜி.ஆர். எட்மண்ட் எம்.எல்.ஏ.

செங்கோட்டை
நெல்லை பக்கீரப்பா

சங்கரன்கோவில்
நெல்லைடாக்டர் பி.பத்மனபன்

கடையநல்லூர்
இரா. கிருஷ்ணன்
—தூத்துக்குடி நகரச் செயலாளர்

பாளையங்கோட்டை
போ. கண்ணபிரான்
—வட்டக் கழகச் செயலாளர்

புளியங்குடி
சுரண்டை பி. கே. சாமி

சென்னையில்

தென்காசி வெற்றி விழாப் பொதுக்கூட்டம்

15--7--68 மாலை 7-மணிக்கு

கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில்
('பேசும் படம்' எதிரில்)

தலைவர்: பவளவண்ணன் (துணைமேயர்)

பேசுவோர்:

அறிஞர் அண்ணா

மற்றும்

அமைச்சர்கள், கழக முன்னணியினர்.

குறிப்பு: - வெற்றி வீரர் கதிரவனும் கலந்துகொள்கிறார்.

திருமணம்

சென்னை மாநகராட்சி முன்னாள் மேயர் வி. முனுசாமி அவர்களின் மகள் செல்வி: **வண்டார்குழலிக்கும்**--பாராசூர் திரு. ஆதிகேசவலு அவர்கள மகன் செல்வன்: **பத்மநாபனுக்கும்** 14—7—68 காலை 9-மணிக்கு சென்னை—தேனாம்பேட்டை ஆபட்ஸ்பரி மாளிகையில், அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அமைச்சர்கள், மற்றும் கழக முன்னணித் தோழர்கள் வாழ்த்துரை வழங்குவர்.